*மே 23, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

**இனிமையான குழந்தாய்:** நீங்கள் மூன்று வடிவங்களின் விழிப்புணர்வை திலகத்தின் வடிவத்தில் ஏற்றுக்கொண்டு முழுமையான வெற்றியாளர் ஆகுக!

*இனிமையான பாபா, சுயம், தந்தை மற்றும் நாடகம் ஆகிய மூன்று விஷயங்கள் மூலமாக அனைத்து ஞானத்தின் விழிப்புணர்வை நான் நினைவு செய்கின்றேன். இம் மூன்று பகுதி விழிப்புணர்வு ஞானமரத்தை கொண்டுள்ளது. மரமானது விதையாக இருந்ததை நான் நினைவு செய்கின்றேன். அதன்பின் இரண்டு இலைகள் தோன்றின. மரமானது விரிவடைகின்றது. இதேபோல், விதையின் அனைத்து ஞானம் தந்தையின் விழிப்புணர்வாகும். இது ஆத்ம ஞானத்திற்கும் நாடகத்திற்கு வழிவகுக்கும்.*

***சமார்த்தி அல்லது சக்தி***

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

***ஆத்மா பாபாவிற்கு: தூய்மையாக இருப்பது நல்லது. மோசமான சகவாசத்தின் பாதிப்பினால் பாதிப்படைய கூடாது. நாம் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் ஆவோம். எனவே, நாம் ஏன் ஒருவருடைய பெயர் மற்றும் வடிவத்தில் சிக்கக் கொள்ள வேண்டும்?***

**நான் விழிப்புணர்வு மனப்பான்மையை கொண்டுள்ளேன். என்னுடைய சொந்த மனதில் எண்ணங்களை பற்றி எச்சரிக்கையாக இருக்கின்றேன். நான் என்னுடைய மனதிற்கு நல்ல சகவாசத்தை கொடுக்கிறேனா? மனதில் முதலில் தோல்வி ஏற்படுவதை நினைவு செய்கின்றேன். நான் கவனமாக ஒரு சுத்தமான, சக்திவாய்ந்த மனோபாவத்தை என் மனத்திலும் இதயத்திலும் நிலைநிறுத்த செய்கின்றேன்.**

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

**பாபா ஆத்மாவிற்கு: அந்த நடிகர்கள் தங்கள் உடைகளை மாற்றி அவர்களது பல்வேறு கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். உங்கள் உடல்களை நீங்கள் மாற்றுகின்றீர்கள். அங்கு, அவர்கள் ஒரு ஆண் அல்லது ஒரு பெண் உடையை தற்காலிகமாக அணிகின்றார்கள். இங்கு ஒரு ஆத்மா ஒரு ஆண் உடையை எடுக்கும் போது, அவர் அந்தவாழ்நாள் முழுவதும் ஒரு ஆண் உடலில் இருக்கிறார்.**

**அனைத்து ஆத்துமாக்களை நோக்கி சகோதர பார்வை தோற்றத்தை தக்கவைத்துக் கொள்கின்றேன். நான் என்னையோ மற்றவர்களையோ ஆணாகவோ பெண்ணாகவோ பார்க்கவில்லை.**

**ஓர் அலையை உருவாக்குதல்**

**நான் மாலை *7:00* மணி முதல் *7:30* மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.**